III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 06-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's / Husband's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

**4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என்னுடைய சகோதரி கிரிஸ்டிபெல்லுக்கு குழந்தை இல்லை அதற்காக நான் மருத்துவ செலவு செய்தேன். எந்த மருத்துவமனைக்கு சென்று எவ்வளவு செலவு செய்தேன் என்றால் எந்த மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மருத்துவமனைக்கு கூட்டிச்சென்று எனது சகோதரிக்காக செலவு செய்தேன் என்று எனது எதிர்வழக்குரையிலும், கூடுதல் எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் எனக்கு அது கவனம் இல்லை. நான் அவ்வாறு எந்த சங்கதியையும் சொல்லவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக கவனம் இல்லை என்று சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் மனோவாவிடம் ரூ.12 லட்சம் வாங்கியதாக சொன்ன விவரத்தை வாதி அவரது வழக்குரையிலும் அவரது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றாலும் அதேபோல் நானும் என்னுடைய வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு கவனம் இல்லை. நான் வாதியிடம் 12 லட்சம் ரூபாய் எதுவும் வாங்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுகின்ற பி.த.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். பி.த.சா.ஆ.1 ஆவணம் 2 வது தாளில் கண்டுள்ள புகாரை நான் கொடுக்கவில்லை. சாட்சி தற்பொழுது அதில் உள்ள மேட்டரை சொன்னால் தான் தன்னால் பதில் சொல்ல முடியும் என்று கூறுகின்றார். எனக்கு தமிழ் படிக்க தெரியும். சாட்சி பி.த.சா.ஆ.1 தாள்2 ல் உள்ள அடக்கங்களை படித்து பார்த்துவிட்டு இது பற்றி எனக்கு கவனம் இல்லை என்று

கூறுகின்றார். என்னிடம் காட்டப்படுகின்ற பி.த.சா.ஆ.1 ல் கண்டுள்ள நான் கொடுத்ததாக சொல்லும் புகாரில் துரைராஜ் தன்னுடைய பினாமிகளான பிலால் அகமது மற்றும் சதீஸ் ஆகியோர்களிடமிருந்து சேர்ந்து தனது பிடியில் வைத்துக்கொண்டு மேற்கண்ட விலாசத்தில் கண்ட சொத்தை பகுதி பகுதியாக சுமார் 5825 சதுர அடி நிலத்தை பதிவு செய்துகொண்டுவிட்டார் என்று கூறியிருக்கிறேன் என்றால் என்னிடம் காட்டப்படும் பி.த.சா.ஆ.1 ல் கண்டுள்ள புகாரை நான் எழுதிக்கொடுக்கவில்லை என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டார். பி.த.சா.ஆ.1 பக்கம் 14 ல் 02.04.2013 அன்று நான் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலத்தில் மேலே கண்ட சங்கதிகள் தான் இருக்கின்றது என்றால் அது எனது கவனத்தில் இல்லை. இந்த வாக்குமூலத்தில் 2,13,40,000/-ரூபாய் மதிப்புள்ள சொத்தை என்னை ஏமாற்றி பதிவு செய்துவிட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் இது எனக்கு கவனம் இல்லை. அந்த சமயத்தில் 1 லட்சம் தான் 4 ஆம் பிரதிவாதி கொடுத்தார் என்று கூறியிருக்கின்றேன் என்றால் நான் எந்த பணத்தையும் வாங்கவில்லை. 06.09.2023 அன்று நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் இதே சங்கதிகள் தான் கண்டுள்ளது என்றால் அது எனக்கு கவனம் இல்லை. இந்த வழக்கில் 4 ஆம் பிரதிவாதியிடம் இருந்து மொத்த கிரைய தொகை ரூ.2,13,42,000/-யை பெற்றுக்கொண்டு 4 ஆம் பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு வாதியுடனும் 3 ஆம் பிரதிவாதியுடனும் கூட்டாக சேர்ந்துகொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த ஆண்டு வரை துரைராஜின் பிடியில் இருந்தேன் என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. 2011 டிசம்பர் வரை 4 ஆம் பிரதிவாதி துரைராஜின் பிடியில் இருந்தேனா என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கிற்காக துரைராஜின் பிடியில் இருந்தேன் என்று பொய்யாக சொல்லுகின்றேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான விசயங்களை கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுகின்ற ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். இந்த ஆவணம் ஆங்கிலத்தில் இருப்பதால் என்ன ஆவணம் என்று எனக்கு தெரியவில்லை. இந்த ஆவணத்தில் கண்டுள்ள 3 தாள்களில் கண்டுள்ள மூன்று கையெழுத்துக்களும் **பி.த.சா.ஆ.2** வரிசைகள் ஆகும்.

(அறிவார்ந்த 4 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).